செ.வெ.எண்: 09/2020 நாள்: 06.01.2020

# பத்திரிக்கைச் செய்தி

2020-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, இரண்டு அடி நீளமுள்ள கரும்புத்துண்டுடன் தலா 20 கிராம் திராட்சை, முந்திரி மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) ரொக்கத் தொகையும் 09.01.2020 முதல் 12.01.2020 வரை வழங்கவும், விடுபட்ட அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 13.01.2020 அன்று வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், நடைமுறையிலுள்ள அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் விடுதலின்றி பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்பதையும், குடும்ப அட்டைதாரர்கள் எவ்வித சிரமமுமின்றி நியாய விலைக் கடைகளுக்கு சென்று பொங்கல் பரிசுத் தொகுப்பினை பெற்றுக் கொள்ளலாம் என்பதையும், குடும்ப அட்டையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களில் யாரேனும் ஒருவர் பொங்கல் பரிசுத் தொகுப்பினை பெற்றுக் கொள்ளலாம் என்பதையும், நெரிசல் ஏற்படும் வண்ணம் கடைகளில் குடும்ப அட்டைதாரர்கள் கூட வேண்டாம் என்றும் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இப்பணி குறித்து புகார்கள் ஏதும் இருப்பின் அதனை தெரிவிக்க மாவட்ட கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்.**0421-2971116** தொடர்புகொள்ள தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**